மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : யார் யார் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி ஏற்கெனவே சொன்னேன். சீர் கேடு அடைந்துள்ள நிலைமையை சீர்படுத்துவதற்கான நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டு கல்லூரி திறக்கப்படும்.

(4) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

" பேரவையின் 41 (3) விதியின்கீழ் இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை தளர்த்தி மூன்றாவது பொருளையும் இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) கவன ஈர்ப்புகள் (தொடர்ச்சி).

(இ) சாதி இந்துக்களின் கொடுமைகளைக் கண்டித்து அரிசனங்கள் பாத யாத்திரை மேற்கொண்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் திருவாளர்கள் வ. துலுக்காணம், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், எம். அண்ணாமலை, ரா. உமாநாத், நா. பழனிவேல்., சி. பழனிமுத்து ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அறிவிக்கை கொடுத்து இருக்கிறார்கள். யாராவது ஒருவர் கொண்டு வந்தால் போதும். திரு. அண்ணாமலை அவர்கள்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" சேலம் மாவட்டம் நடுப்பட்டி கிராம அரிசன ஆண்கள், பெண்கள், ஜாதி இந்துக்களின் கொடுமைகளைக் கண்டித்து பாத யாத்திரையாக சென்னை வந்து கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு, அவர் படித்தது வேறு.